மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, ஆசிரியர்கள் என்று வருகின்றபோது மையத்திற்கு ஒருவர் இருப்பார். ஆக 22,122 மையங்களில் ஒவ்வொரு மையத்திற்கும் ஒரு ஆசிரியர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார். நகரங்களிலேயும் இதைச் செயல்படுத்த வேண்டுமென்ற எண்ணம் தமிழக அரசிற்கு இருக்கிறது. பல்கலைக் கழகங்கள், கல்லூரிகள், அல்லது தொண்டு நிறுவனங்கள் போன்றவை நகர்ப்புறப் பகுதிகளில் இந்த சேவையைச் செய்யலாம்.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர்ப்புறங்களில் எந்தத் துறையின் மூலமாக அல்லது எந்த அதிகாரியின் மூலமாக இந்த மையங்களை ஒன்று சேர்த்து அமைக்கின்ற முயற்சிகள் நடைபெறுகின்றன, யாரைத் தொடர்பு கொண்டால், இந்த மையங்கள் அமைக்கப்படும் என்கின்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநர் என்ற அதிகாரி ஒருவர் இருக்கிறார். அவரைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

728—(*வினா எண் 9129)—திரு. எப். எம். இராசரத்தினம் மற்றும் திரு. டி. கிருஷ்ணமூர்த்தி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில வயது வந்தோர் கல்வித் திட்டத்தில் மேற்பார்வையாளர்களாக பணி புரிகின்றவர்களை நிரந்தரமாக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எப். எம். இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறந்த ஒரு சமூகத் தொண்டு புரிகிற அவர்களை எதிர்காலத்திலாவது நிரந்தரமாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைக் கேட்டுக் கொள்வதோடு மாநில வயது வந்தோர் கல்வித் திட்டத்தின் கீழ் மேற்பார்வையாளர்களாக தமிழகத்தில் எத்தனை பேர் பணி புரிகிறார்கள், எவ்வளவு வயது வந்தோர் சென்ற ஆண்டில் பயன் பெற்றார்கள், இவ்வாண்டு எவ்வளவு பேர் பயன் பெறுகிறார்கள் என்பதையும் எந்த அடிப்படையில் மேற்பார்வையாளர்களாகப் பணிக்கு

அமர்த்தப்படுகிறார்கள் என்பதையும் அவர்கள் எவ்வளவு சம்பள விகிதம் பெற்றுக் கொள்கிறார்கள், அது எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது என்பதையும் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தேசீய வயது வந்தோர் கல்வித் திட்டம் தற்காலிகமானது. ஒவ்வொரு ஆண்டும், இத்திட்டம் நீட்டிக்கப்படுகிறது. ஆகவே, மேற்பார்வையாளர்கள் பணிக் காலமும் தற்காலிகமாக உள்ளது. திட்டம் ஒரு சுற்று முடிந்த பிறகு, மேற்பார்வையாளர்கள் பணி நீக்கம் செய்யப்படுகிறார்கள். திட்டம் நீட்டிக்கப்படும்போது, மீண்டும் துவங்கும்போது, மேற்பார்வையாளர்கள் கடந்த காலத்தில் பணியாற்றியதைக் கருத்தில் கொண்டு, மீண்டும் நியமிக்கப்படுகின்றனர். தற்போது மத்திய அரசு நிதி உதவியுடன் நடத்தப்படும் கிராமீய செயல்முறை எழுத்தறிவுத் திட்டத்திற்கு 270 மேற்பார்வையாளர்களும், மாநில அரசு செலவில் நடத்தப்படும் மையங்களை மேற்பார்வையிட 363 மேற்பார்வையாளர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மைய அரசின் திட்டத்தில் பணி புரிகின்றவர்களுக்கு ரூ. 510 பிளஸ் ரூ. 150 பயணப்படியும், மாநிலத் திட்டத்தில் பணி புரியும் மேற்பார்வையாளர்களுக்கு ரூ. 600 ப்ளஸ் ரூ. 75 பயணப் படியும் அளிக்கப்படுகிறது. தங்களுக்கு ஊதிய விகிதம் வழங்கப்பட வேண்டும் என்று அவர்கள் கோரியுள்ளனர். அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எல்ல. இராசமாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தின் மூலமாக பயன் அடைவோர் எத்தனை பேர் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, முதல்கேள்விக்குப் பதிலாக அதை நான் சொன்னேன். இந்தத் திட்டத்தின் மூலமாக 6 இலட்சத்து 93 ஆயிரத்து 168 பேர்கள் பயன் அடைகிறார்கள்.

திரு. இரா. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர்களே, மாநில வயது வந்தோர் கல்வித் திட்டத்தில் மேற்பார்வையாளர்களாகப் பணி புரிபவர்களை நிரந்தர ஆசிரியர்களுக்கான தேர்வு செய்யும்போது முன்னுரிமை அளித்து அவர்கள் தேர்வு செய்யப்படுவார்களா? தேர்வு செய்யப்படுகிறபோது, வயது வந்தோர் கல்வித் திட்டத்தில் மேற்பார்வையாளர்களாக இருந்த காலங்கள் அவர்களுக்கு வரைமுறைப்படுத்தப்படுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அதிலே பணியாற்றுகிறவர்களுக்கு முன்னுரிமை தரவேண்டும் என்பதில் ஒரு நியாயம் இருக்கிறது. அது குறித்து அரசு பரிசீலிக்கும்.